ISSN 2320-589X

# செம்புலம்


பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

விருட்சம் : 3 நவம்பர் : 2015 விழுது : 12

## CHEMPULAM

உரூ. 30/-

*An International Tamil Research Quarterly Journal*



ஆசிரியர்
**செம்மூதாய் சதாசிவம்**

# உள்ளுறை


| தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|
| சிறுபத்திரிகை மரபும் புதுக்கவிதைக் குறித்த மனப்போக்கும் | ச. அன்பு | 04 |
| கம்பராமாயணத்தில் திணை மயக்கம் | சா. சுதா | 08 |
| ஐங்குறுநூற்று உள்ளுறை, இறைச்சி பாடல்களில் முன்னம் | மா. திருமுருகன் | 10 |
| கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் வணிக அறம் | ந. மகாதேவி | 13 |
| பழந்தமிழகத்தில் காணலாகும் இறப்பு மற்றும் ஈமம் சார்ந்த நம்பிக்கைகள் | த. தினேஷ் | 16 |
| நான்மணிக்கடிகை உணர்த்தும் கற்றோர் மேன்மை | ஆ. சுரேஷ் | 20 |
| வேலூர் ம. நாராயணன் கவிதைகளில் தமிழினச் சிந்தனைகள் | வெ. ரா. மீனாட்சி | 23 |
| கவிஞர் மேத்தாவின் புதுக்கவிதைப் போராட்டம் | சு. தீபா | 26 |
| குடும்ப விளக்கில் உணவுப் பழக்கம் | முனைவர் ஜோ. அருணாதேவி | 30 |
| சேனாவரையர் உரைத்திறன் | கோ. சுந்தராம்பாள் | 34 |
| திருக்கோயில் வழிபாட்டு முறைகள் | ப. பிரியா | 38 |
| சித்தர்கள் காட்டும் நெறி முறைகள் | ப. சுபத்திரா | 40 |
| அற இலக்கியங்களில் - மழலையின் மகிமை | முனைவர் க. முத்தழகி | 44 |
| எழுச்சிக் கவிஞர் 'சினேகன்' பன்முகப் பார்வை | முனைவர் மோ. கிறிஸ்டி | 47 |
| அற இலக்கியங்களில் கள்ளுண்ணாமை | முனைவர் மு. புஷ்பரெஜினா | 50 |
| கீழ்க்கணக்கு அற நூல்களில் காணலாகும் ஒழுக்கத்தின் மேன்மை | ப. கதிரவன் | 53 |
| திருக்குறள் நாலடியார் கூறும் அறமே செல்வம் | ப. தமிழ்க்கனி | 56 |
| கலைஞர் கவிதைகளில் புரட்சிகள் | பு. வழியரசன் | 59 |
| நாமக்கல் கவிஞரின் மொழித்திறன் | எ. இராஜேஷ் | 61 |
| மதுரைக் காஞ்சி காட்டும் சமூகம் | பா. சிவரஞ்சனி | 64 |
| மலரும் மஞ்சமும் - ஒரு திறனாய்வு [உயிர்ச்சக்தி + ஊட்டச்சக்தி + ஊக்கச்சக்தி = காதல்] | முனைவர் க.மாரியப்பன் | 68 |
| செம்மொழிகளுள் தமிழ் [தாய்] | இரா. அருணா | 72 |
| பேரூர்ப் புராணத்தில் அணிகள் | கு. சிரஞ்சீவி | 75 |
| மணிமேகலை காட்டும் ஐவகைச் சீலம் | முனைவர் கா.மீரா | 78 |
| ஆண்டாள் பிரியதர்ஷினியின் புனைக் கதைகளில் மனிதநேயம் | க. புஷ்பலதா | 81 |
| திருவள்ளுவரின் பார்வையில் மழலைச் செல்வம் | சி.அழகேசன் | 84 |

# திருக்கோயில் வழிபாட்டு முறைகள்



**ப. பிரியா**

உதவிப் பேராசிரியர்,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்

உலக மக்கள் அனைவரும் இறைவன் திருவருளைப் பெற்று உய்ய சமயக்குரவர்கள் நால்வரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் வாழ்ந்து சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவியினை அடைந்தார்கள். இதனை அரும்பு, மலர், காய், கனி என்று உருவகப் படுத்துவார் தாயுமானவர்.

இந்நான்கு நெறிகளில் சரியை நெறி பல தலங்களுக்கும் யாத்திரைச் சென்று திருக்கோயில்களை வழிபட வேண்டும் என்பதை,

**"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**

**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**

**பாடுமின் பாடிப்பணிந்துமின் பணிந்தபின்**

**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே".**

என்ற திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

## திருக்கோயிலை வலம் வருதல்

திருக்கோயிலை வலம் வருதல் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தேவார மூவர் காலத்தில் சிறப்பாக குறிப்பிடப் பெற்ற வலம் வருதல் முறை பிற்காலத்தில் அரசர்கள் திருக் கோயில்களில் வலம் வருவதற்கு என்றே பெரிய திருச்சுற்றுகளை (பிரகாரங்கள்) அமைத்தனர். (சான்றாக தில்லை திருவாரூர், திருவரங்கம், திருவையாறு திருவானைக்காவல் போன்ற தலங்களில் உள்ள திருச்சுற்றுகளைக் குறிப்பிடலாம்) திருக்கோயிலை வலம் வருதல் தனியாக ஒரு விழாவாகவே கொண்டாடப் பெறும் அளவிற்குச் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

1. திருவானைக்காவலில் ஆண்டு தோறும் நடைபெறும் பஞ்சபிரகார விழாவை குறிப்பிடலாம்.

2. மாதம் தோறும் திருவண்ணாமலையில் பௌர்ணமி அன்று கிரிவலம் வருதல் பற்றி,

**"வள்ளல் இருந்தமலை யதனை வலம்**

**செய்தல் வாய்மையென"**

என்று சம்பந்தர் இந்நிகழ்வினை சீர்காழி பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தரும், நாவுக்கரசரும் சீர்காழி கோயில் கோபுரத்தைப் பணிந்து உள்புகுந்து வலம் வந்தப் பின் இறைவன் திருமுன்நின்று பிள்ளையார் அப்பரே நீர் இறைவரைப் பாடுவீர், எனக்கேட்க "பார் கொண்டு மூடி கடல் கொண்டஞான்று" என தொடங்கும் கழுமலப் பதிகத்தைப் பாடினார் சுந்தரர் திருவாரூர் தியாகேசரைக் கண்டு வணங்கி வரும் வழியில் கழுமலம் வரவே, சம்பந்தர் அவதாரத் தலமும், ஞானப் பால் உண்டு வாழ் பெரும்பேறும், புகழும் கொண்டதலமாகிய இதனை, "என் கால்களால் மிதித்தல் தகாது என்



ஊரினை வலம் வரும்போது "கழுமல நாதர் காட்சி நல்க" "கழுமல வளநகர் கண்டு கொண்டேனே" என்று பாடுகின்றார். இதன் மூலம் கோயிலை வலம் வந்து வணங்குதல் என்ற முறை தொன்மையானது என்பதை அறிய முடிகின்றது.

## திசைநோக்கி வழிபடல்

திருக்கோயிலுக்குச் சென்று வழிபட இயலாதவர்கள் இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில் இருக்கும் திசையை நோக்கித் தொழுது தம் வழிபாட்டை நிகழ்த்துவது "திசை நோக்கி வழிபடுதல்" எனப்படும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற பழமொழியும் இவ்வழிபாட்டை உணர்த்தவே தோன்றியது.

சம்பந்தர் தில்லைப் பதியிலிருந்து வரும் போது சீர்காழி தோணியப்பர் நினைவுக்கு வர அத்திசையை நோக்கி நின்று, "வண்டார்குழல் அரிவையொடு பிரியா வகைபாகம்"எனப் பாடுகின்றார்.

## நினைந்து பாடுதல்

சம்பந்தர் திருவீழிமிழலையில் சீர்காழிப் பதிவாழ் அந்தணர்களுடன் சிவதலங்கள் பலவும் கண்டுத் தரிசித்து வந்தார். நீண்டநாள் ஆனதால் "தோணிநாதர் கழல் இறைஞ்ச தாங்கள் காழிப்பதி எழுந்தருள வேண்டுமென" வேண்டினார்கள். அன்றிரவு புகலிப்பிரான் கனவில் தோன்றி "தோணியில் நாமிருந்த வண்ணம் தூமறை வீழிமிழலை தன்னுள் சேணுயர் விண்ணின் இழிந்த இந்தச்சீர் கொள் விமானத்துக் காட்டுகின்றோம் பேணும்படியால் அறிதி" எனக் காழிநாதரே கூறினார். பொழுது புலர்ந்ததும் எழுந்து நீராடி விண்ணிழி விமானத்துள் புகுந்தனர். அப்பொழுது "விண்ணிழி விமானம் விரும்பியது என்னே"என்று வினாவுரை முறையில் "மைம்மரு பூங்குழல் கற்றை துற்ற"என்ற பதிகத்தைப் பாடினார்.

## வழிபடும் காலம்

திருக்கோயில் சென்று வழிபாடுசெய்ய ஏற்ற காலம் குறித்து மூவர் தேவாரத்தில் செய்திகள் காணப்படுகின்றன. அவர்கள் இருவேளை (இரவு, பகல்) வழிபாடு, முப்போது வழிபாடு, எப்போதும் வழிபாடு செய்தல் என்ற மூன்று நிலைகளைப் பதிவு செய்துள்ளனர். சிறப்பாக இருவேளை, முப்போது வழிபாடு செய்தலைப் பல இடங்களில் குறிப்பிட்டு உள்ளனர். சம்பந்தர்,

**"இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்**
**பரவுதல் ஒழிகிலேன்"**

என்றும்,

**"இரவும் பகலும் நினைந்தாலும்**
**எய்த நினைய மாட்டேன் நான்"**

என்றும் இருவேளை வழிபாடு நிகழ்த்தியமையைப் பாடுகின்றார்.

திருக்கோயிலுக்குச் சென்று இறைவனது உருவ, அருவுருவ வழிபாட்டினை மேற்கொண்டு இறையருளைப் பெற்று திகழ்ந்தார்கள்.

## இறைநிலை

இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பவர்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள். உள்ளும், புறமும் ஒரு தன்மைக் காட்சியர். இரவு பகல் இல்லாத இன்ப நிலையை எட்டியவர். நினைப்பும், மறப்பும் கடந்தவர். ஓடும் செம்பொன்னும் ஒன்றென நோக்குபவர். கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாத இயல்புடையவர்கள். உறவு பகை கடந்த உயர்ந்த நிலையினர்.

- மகாவித்துவான்
மா. அமிர்தலிங்கனார்.

Owned and published by Dr. S. Sathasivam from. No.17, Tagore Street,
MMDA Nagar, Chitlapakkam, Chennai - 600 064. and printed by R. Venkatesan at
Anbu Achakam, 22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501.
Editor - Dr.S.Sathasivam.

